**இன்று (18.12.2020), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், முத்துநாயக்கன்பட்டியில் முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக்கை திறந்து வைத்து ஆற்றிய உரை:**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

இந்த சிறப்பான நிகழ்ச்சியில் பங்கு பெற்றுள்ள அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கம்.

மாண்புமிகு அம்மாவின் அரசு, கிராமங்களிலிருந்து நகரம் வரை ஏழை, எளிய மக்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதிகளில் முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக் தொடங்கப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்டு, அறிவிப்போடு நிற்காமல், தமிழகம் முழுவதும் முதலமைச்சர் அம்மா மினி கிளினிக் தொடங்கப்பட்டு வருகிறது. இப்போது முத்துநாயக்கன்பட்டியிலும் திறந்து வைக்கப்பட்டுள்ளதற்கு மகிழ்ச்சி அடைகிறேன்.

கிராமத்தில் வாழ்கின்ற மக்களுக்கு அந்தப் பகுதியிலேயே, முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக் துவங்குகின்றபோது, அவர்களுக்கு காய்ச்சல், தலைவலி மற்றும் சிறிய நோய்கள் ஏற்பட்டால் உடனடியாக அம்மா மினி கிளினிக்கை நாடி தங்களுடைய நோயை குணப்படுத்திக் கொள்ளலாம். இங்கே ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு உதவியாளர் காலை 8 மணி முதல் மதியம் 12 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் 7 மணி வரையிலும் நோயாளிகளுக்கு பரிசோதனைகள் செய்து உரிய மருத்துவ சிகிச்சை அளிப்பார்கள்.

சேலம் மாவட்டத்தில் 100 இடங்களில் முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக் தொடங்கப்படும் என்று அறிவித்தேன். முதற்கட்டமாக கொண்டலாம்பட்டியிலும், இரண்டாவதாக லத்துவாடியிலும் இன்று காலை மூன்றாவதாக, பனமரத்துப்பட்டி, ஏ.வாணியம்பாடி பகுதியிலும் திறந்து வைத்துள்ளேன். சேலம் மாவட்டத்தில், கடந்த மூன்று நாட்களில் 4 இடங்களில் நானே நேரில் சென்று மினி கிளினிக்குகளை தொடங்கி வைத்துள்ளேன். மற்ற இடங்களில் சட்டப்பேரவை உறுப்பினர்கள் முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக்கை தொடங்கி வருகின்றனர். இது சாதாரண விஷயமல்ல. ஆரம்ப சுகாதார நிலையங்களில் இருக்கும் அனைத்து மருந்துகளும் முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக்கிலும் வைக்கப்பட்டுள்ளது. மக்களுக்கு எளிதாக மருத்துவ உதவி கிடைக்க வேண்டுமென்பதற்காக ஏழை மக்கள் அதிகமாக

உள்ள பகுதிகளில் இதை அமைக்க வேண்டுமென்று நான் ஆணையிட்டு, அதன்படி, முத்துநாயக்கன்பட்டியை தேர்ந்தெடுத்து அமைத்திருக்கிறார்கள்.

முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக் மூலம் கிராமத்தில் வாழ்கின்ற மக்கள் அந்தந்தப் பகுதியிலேயே, அவர்களுக்கு காய்ச்சல், தலைவலி மற்றும் சிறிய நோய்கள் ஏற்பட்டால் உடனடியாக அம்மா மினி கிளினிக்கை நாடி தங்களுடைய நோயை குணப்படுத்திக் கொள்ளலாம். கடுமையான நோய் மற்றும் அறுவை சிகிச்சை போன்றவற்றிற்கு தங்கள் பகுதியிலுள்ள மினி கிளினிக் மருத்துவரை நாடினால், அவர் பரிசோதனை மேற்கொண்டு, மேல் சிகிச்சைக்காக சேலம் தலைமை மருத்துவமனைக்கு அனுப்பி, அவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்படும். இவ்வாறு ஏழை, எளிய மக்களுக்காக திட்டங்களைத் தீட்டி செயல்படுத்துகிற ஒரே அரசு, அம்மாவின் அரசு என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

பொன்மனச்செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர், இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா ஆகிய இருபெரும் தெய்வங்களின் வழியில் நடைபெறுகின்ற அரசு, அம்மாவின் அரசு. பொன்மனச்செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, கடைக்கோடியில் வாழ்கின்ற ஏழை, எளிய மக்களின் வாழ்வு ஏற்றம் பெற வேண்டும், அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் முழுமையாகக் கிடைக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய லட்சியம் என்று இந்த இயக்கத்தை உருவாக்கினார், வெற்றி கண்டார், முதலமைச்சரானார். அவர் வாழ்ந்த காலம் முழுவதும் பொற்காலம். ஏழைகளின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதை நிறைவேற்றிக் காட்டிய ஒரே தலைவர் பொன்மனச்செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள். அதே வழியில் வந்த இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களும், பேரறிஞர் அண்ணா, இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் ஆகியோர் விட்டுச் சென்ற பணியை தொடர்ந்து செயல்படுத்தி, அந்த இருபெரும் தலைவர்கள் கண்ட கனவை நனவாக்குவதற்கு இலட்சயப் பாதையில் நடைபோட்டு, தான் உயிருடன் இருந்தவரை நாட்டு மக்களுக்கு அர்ப்பணிப்பு உணர்வோடு பணியாற்றினார்கள்.

அந்த இருபெரும் தலைவர்களுக்கும் வாரிசுகள் கிடையாது. நாம் தான் வாரிசு, மக்கள் தான் வாரிசு, அவ்வாறு எண்ணித்தான் நல்ல பல திட்டங்களை இந்த நாட்டு

மக்களுக்குத் தந்தார்கள். ஒரு தாய், தன் குழந்தையின் தேவையை குறிப்பறிந்து செயல்படுவதைப் போல இருபெரும் தலைவர்களும் இந்நாட்டு மக்களை குழந்தைகளாக எண்ணி, அவர்களின் குறிப்பறிந்து, தேவையான திட்டங்களை எப்பொழுது செயல்படுத்த வேண்டுமென்று எண்ணி, அவைகளை செயல்படுத்தியும் காட்டினார்கள். அவர்கள் செயல்படுத்திய அத்தனை திட்டங்களும் உயிரோட்டமுள்ள திட்டங்கள். வேறு எந்தத் தலைவர்கள் வந்தாலும் அந்தத் திட்டங்களை நிறுத்த முடியாது. சரித்திர சாதனை படைத்த சத்துணவுத் திட்டத்தை தமிழகம் மட்டுமல்லாமல், இந்தியா முழுவதும் கடைபிடித்தார்கள். இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆலயங்களில் அன்னதானத் திட்டம் கொண்டு வந்து உணவு கொடுத்தார்கள். பெண்களுக்குத் தேவையான திட்டங்களை குறிப்பறிந்து செயல்படுத்தினார்கள். கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கினார்கள். அம்மா வழியில் நடைபெறும் அரசும் அம்மாவின் வழியை கடைபிடித்து வருகிறது.

இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தான் மீண்டும் முதலமைச்சரானவுடன் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்கப்பட்டு வரும் ரூபாய் 12 ஆயிரத்தை ரூபாய் 18 ஆயிரமாக உயர்த்தி வழங்குவேன் என்று தேர்தல் நேரத்தில் வாக்குறுதி அளித்ததை நாங்கள் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஊட்டச்சத்துக் குறைபாட்டினால், பிறந்த குழந்தைகளின் இறப்பைத் தவிர்க்க, கர்ப்பிணித் தாய்மார்களின் சிசு நன்றாக வளர வேண்டுமென்று, கிராமங்களிலிருந்து நகரம் வரை, ஊட்டச்சத்து நிறைந்த தாய்–சேய் நலப் பெட்டகம் நாங்கள் கொடுக்கிறோம். இந்தியாவில் இதுபோன்று எந்த மாநிலத்திலாவது உள்ளதா ? ஒவ்வொரு திட்டத்தையும் பார்த்துப் பார்த்து நிறைவேற்றுகிற அரசு அம்மாவின் அரசு.

நம்முடைய மாவட்டம் தான் முதலமைச்சரின் மாவட்டம் என்ற பெருமையைப் பெற்றுள்ளது. வேறு மாவட்டத்திலிருப்பவர் முதலமைச்சராக இருந்தால் சேலம், முத்துநாயக்கன்பட்டிக்கு வர முடியுமா ? நான் ஏற்கனவே பல முறை முத்துநாயக்கன்பட்டிக்கு வந்து கூட்டங்களில் பேசிச் சென்றுள்ளேன். அன்றைக்கு இருந்த பழனிசாமியாகவே இப்போதும் உள்ளேன். என்னைப் பொறுத்தவரை, உங்களுக்கு பணி செய்கின்ற பொறுப்பைத்தான் எனக்குத் தந்திருக்கிறார்கள். நான் முதலமைச்சர் என்ற எண்ணத்தில் இருந்ததே கிடையாது, இருக்கப்போவதும் இல்லை.

மக்களுக்கு சேவை செய்யக்கூடிய உயர்ந்த பணியை என்னிடம் நீங்கள் ஒப்படைத்துள்ளீர்கள். அதைச் சிந்தாமல், சிதறாமல், நீங்கள் நினைப்பதை நிறைவேற்றுகிற முதலமைச்சராக நான் பணியாற்றுவேன். அந்த அடிப்படையில்தான், கிராமத்தில் பிறந்து, வளர்ந்த காரணத்தினால், கிராமம் மற்றும் நகரங்களில் உள்ள ஏழைகள் மருத்துவ வசதி பெறுவதற்கு போராடிக் கொண்டிருந்த நிலையை மாற்றுவதற்காகத்தான் முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக் நான் கொடுத்திருக்கிறேன்.

என்னுடைய சிறு வயதில், உடல் நிலை சரியில்லாதபோது, எங்கள் கிராமத்திலிருந்து 14 கி.மீ. தொலைவிலுள்ள எடப்பாடி அல்லது 24 கி.மீ. தொலைவிலுள்ள பவானிக்கு செல்ல வேண்டும். அப்படிப்பட்ட நிலை இருக்கக்கூடாது, நான் பட்ட கஷ்டத்தை, தமிழகத்தில் ஏழைகள் எவரும் பெறக்கூடாது, அவர்களுக்கு நல்ல சிகிச்சை கிடைக்க வேண்டும்.

பொன்மனச்செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சிறு வயதில் உணவுக்காகக் கஷ்டப்பட்டதை உணர்ந்து, அவர் முதலமைச்சரானவுடன் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்து வயிறார உணவு கொடுத்து ஏழைக் குழந்தைகளை கல்வி கற்கச் செய்தார், அனுபவம் தான் காரணம். அனுபவம் தான் பிரதிபலிக்கும். அந்த அனுபவம் தான் இப்போதும் பிரதிபலித்திருக்கிறது. நானும் கிராமத்தில் விவசாயக் குடும்பத்தில் பிறந்து, அரசுப் பள்ளியில் படித்தவன். அரசுப் பள்ளியில் பயிலும் ஏழை மாணவர்களின் பொருளாதார சூழ்நிலை காரணமாக மருத்துவப் படிப்பு என்பது இயலாத நிலையில் இருந்தது, எட்டாக்கனியாக இருந்தது. அரசுப் பள்ளியில் படிக்கும் 41 விழுக்காடு மாணவச் செல்வங்களுக்கு கடந்தாண்டில் வெறும் 6 மருத்துவ இடங்கள்தான் கிடைத்தது. ஏழை குடும்பத்தில் பிறந்த மாணவச் செல்வங்கள் என்ன கஷ்டப்படுகிறார்கள் என்று அடிப்படையாக உணர்ந்த காரணத்தால், 7.5 சதவீதம் உள் ஒதுக்கீடு அறிவித்து, நிறைவேற்றினேன். இப்போது, 313 இடங்கள் எம்.பி.பி.எஸ்–ல் கிடைத்திருக்கிறது. பல் மருத்துவக் கல்லூரியில் 87 இடங்கள் கிடைத்திருக்கிறது. புதிதாக 11 அரசு மருத்துவக் கல்லூரிகளை தமிழகத்தில் துவங்க அடிக்கல் நாட்டப்பட்டு கட்டுமானப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. 2020–21ஆம் ஆண்டில் அந்தப் பணிகள் நிறைவேறுகின்றபோது, அதில் 1650 இடங்கள் புதிதாக தோற்றுவிக்கப்படும்.

அதிலும் ஒரு குறிப்பிட்ட இடங்கள் அரசு பள்ளி மாணாக்கர்களுக்கு கிடைக்கும்போது, அடுத்த ஆண்டு சுமார் 435 மருத்துவ இடங்கள் அவர்களுக்கு கிடைக்கும். இது ஒரு வரலாற்றுச் சாதனை ஆகும்.

கிராமம் முதல் நகரத்திலிருக்கும் ஏழை குடும்பத்தில் பிறந்த மாணவ, மாணவியர் மருத்துவம் படித்துதான் கிராமத்தில் இருக்கும் மக்களுக்கு வைத்தியம் செய்யமுடியும். டாக்டர் என்பவர் பொதுவானவர். நகரத்திலே படிக்கின்றவர்கள் வசதி வாய்ப்போடு பிறந்தவர்கள், கிராமத்திற்கு வருவதற்கு தயங்குவார்கள். ஆனால், கிராம சூழ்நிலையில் வாழ்ந்த ஒருவர் கிராமத்தில் பணியாற்றுவதை பெருமையாக எடுத்துக் கொள்வார். அந்த அடிப்படையில், கிராம சூழ்நிலையில் வாழ்ந்த மாணவ, மாணவியர் மருத்துவப் படிப்பு படித்து முடித்த பிறகு கிராமத்தில் வந்து பணியாற்றக்கூடிய சூழ்நிலையை நாம் எதிர்காலத்தில் பார்ப்போம். ஆகவே, மாண்புமிகு அம்மாவின் அரசு ஏழை மக்களின் அரசு, ஏழை மக்களுக்குத் தேவையான திட்டங்களை நிறைவேற்றுகின்ற அரசு என்பதை சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

அதுமட்டுமல்ல, இந்தப் பகுதியில் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும் தரம் உயர்த்தியது அம்மாவின் அரசு. இதுபோன்று தரம் உயர்த்துகின்றபோது, அந்தந்தப் பகுதிகளிலேயே மாணவச் செல்வங்கள் உயர்கல்வி கற்க முடியும் என்ற அடிப்படையில் இதை நாங்கள் உருவாக்கித் தந்திருக்கிறோம்.

மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்கள் மற்றும் விவசாயப் பெருமக்களின் 40 ஆண்டுகால கோரிக்கையை நிறைவேற்றும் விதமாக, 2015ஆம் ஆண்டில் ரூபாய் 1.60 கோடி மதிப்பீட்டில் பூலா ஏரி, வரத்துக் கால்வாய் ஆகியவை தூர்வாரி சரிசெய்யப்பட்ட காரணத்தால், 11 ஏரிகள் இப்போது தண்ணீர் நிரம்பி வழிகின்றன. அதனால், சுமார் 3,000 ஏக்கர் அளவிற்கு நிலத்தடி நீர் உயர்ந்திருக்கிறது. எல்லாயூர் சரபங்கா நதியின் குறுக்கே ஸ்ரீதேவி, பூதேவி கோவிலுக்கு அருகில் நெடுஞ்சாலைத் துறை மூலம் பாலம் கட்ட வேண்டுமென்று நீண்டநாள் கோரிக்கையை ஏற்று, ரூபாய் 2 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அந்தத் ஆற்றின் குறுக்கே ஒரு பாலத்தை கட்டிக் கொடுத்து, 15 கிராம மக்களுக்கு போக்குவரத்து வசதியை ஏறபடுத்திக் கொடுத்த அரசு

எங்களுடைய அரசு. மாண்புமிகு அம்மாவின் அரசு இன்னும் ஏராளமான திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.

விவசாயிகளுக்காக நிறைய திட்டங்களை நாங்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றோம். டிராக்டர் வாங்குவதற்கு 50 சதவீத மானியம் கொடுக்கிறோம். பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் .மூலம் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத் தொகை வழங்கும் அரசும் அம்மாவின் அரசுதான், இதுவரை எந்த அரசும் வழங்கிய சரித்திரம் கிடையாது. பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு இந்த நான்காண்டுகளில் மட்டும் ரூபாய் 9,200 கோடி இழப்பீட்டுத் தொகையாக பெற்றுத் தந்த ஒரே அரசு தமிழ்நாடு அரசு. இந்தியாவிலேயே, பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் அதிகளவில் இழப்பீட்டுத் தொகையை பெற்றுத் தந்த சரித்தரம் படைத்த அரசு அம்மாவின் அரசு.

பொழிகின்ற மழைநீர் ஒரு சொட்டு நீர்கூட வீணாகக் கூடாது என்பதற்காக நீர் மேலாண்மைத் திட்டத்தின் மூலம் முழுக்க, முழுக்க விவசாயிகள் பங்களிப்புடன் பல்வேறு ஏரிகள் தூர்வாரப்பட்டு, நீர் நிரம்பியுள்ளது. ஆகவே, தேசிய அளவில் நீர் மேலாண்மையில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது என்று 2019–20ஆம் ஆண்டிற்கான தேசிய விருதை மத்திய அரசு கொடுத்திருக்கிறது.

அதுபோல், ஒவ்வொரு துறையிலும் சிறப்பாகப் பணியாற்றி முத்திரை பதித்துக் கொண்டிருக்கிறோம். மருத்துவத் துறை, மின்சாரத் துறை, போக்குவரத்துத் துறை, கல்வித் துறை ஆகிய துறைகளில் தேசிய விருதுகளைப் பெற்றுக் கொண்டிருக்கிறோம். உள்ளாட்சித் துறையில், நூற்றுக்கும் மேற்பட்ட தேசிய விருதுகள் பெற்றுக் கொண்டிருக்கிறோம். இவ்வாறு, துறைகள் வாரியாக அம்மாவின் அரசு தேசிய விருதுகள் பெற்றுக் கொண்டிருப்பது ஒருவர் கண்ணுக்கு மட்டும், ஸ்டாலினுக்கு மட்டும் தெரியவில்லை. நாங்கள் கஷ்டப்பட்டு உழைத்து சரியான திட்டங்களைக் நிறைவேற்றுகிறோம், அவை மக்களை சென்றடைகிறது. தேசிய அளவில் பல்வேறு மாநிலங்களின் நிலைகளுடன் தமிழ்நாட்டை ஒப்பிட்டு நமக்கு தேசிய விருது வழங்கியுள்ளார்கள். பாராட்ட மனமில்லாவிட்டாலும் அவதூறாக பேசாமல் இருந்தாலே நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசு உங்களின் அரசு, மக்களின் அரசு, மக்களுக்குத் தேவையான திட்டங்களை நிறைவேற்றுவதில் முதலிடம் வகிக்கின்ற மாநிலம் தமிழ்நாடு என்பதை பெருமையோடு சொல்லி, உங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த என்னை இங்குள்ள அனைவரும் முதலமைச்சராக பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள், நான் முதலமைச்சராக எப்போதும் நினைத்ததுகூட கிடையாது. இது ஒரு பதவி, இந்தப் பதவியின் மூலம் நாட்டு மக்களுக்கு எண்ணற்ற திட்டங்களை நிறைவேற்ற முடியும் என்ற எண்ணத்தில்தான் நான் இருக்கிறேன். ஆனால், என் முன் நிற்பவர்கள் அனைவரையும் முதலமைச்சராக பார்க்கின்றேன். ஆகவே, நீங்கள் கொடுத்த இந்தப் பணியை சிறப்பான முறையில் செய்து, நமது மாவட்டத்திற்கு பெருமை சேர்க்கின்ற விதமாக செயல்படுவேன், செயல்படுவேன் என்று தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

-------

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**